**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள்**
**அருளியது**

*அன்புச் சேவுக! - தொகுப்பு 4*

# ஆயுதப் போர் கூடாது; காயுதப் போர்தான் தேவை!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.**


## இந்து இலக்கியக் கழக வெளியீடு

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,118 ஆவணி மாதம்.**

காணிக்கை: ரூ 10/-

# <u>உள்ளுறை</u>

## <u>அன்புள்ள சேவுக!</u>

**சென்ற மாத இதழ்கள் போல இந்த இதழிலும் குருதேவர் தமது தலைமை மாணுக்கர் திரு நெ.சேவுகன் அவர்களுக்கு எழுதிய அஞ்சல் கட்டுரைகள் சிலவற்றின் தொகுப்பு வெளியாகின்றது. குருதேவர் அறிக்கை 10 மற்றும் 38 முதல் 48 வரை உள்ள அறிக்கைகளில் வெளியாகிய 'அன்புச் சேவுக!' கட்டுரைகளும், கையெழுத்து பிறதிகளாக இரண்டு கட்டுரைகளும் இந்த வெளியீட்டில் உள்ளன.**

## <u>இந்து வேத தேவ விளக்கச் சிந்தனைகளில் சில...</u>

6. இந்து மதத்தின் பழமையான கோயில்கள் அனைத்திலும் உள்ள சக்கரங்கள், தகடுகள் அனைத்தும் தமிழ்மொழியில் எழுதப்பட்டவைதான்.
7. இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் இம் மண்ணுலகுக்கு வழங்கிய '<u>பதினெண்சித்தர்களுடைய தாய்மொழியும்</u>', '<u>அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமாக</u>' விளங்குவது '<u>அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி</u>'தான்.
8. அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் இருநூற்று நாற்பத்தேழு (247) எழுத்துக்களால் இந்து வேத நூல்களும், இந்து மத நூல்களும் எழுதப்பட்டு இருக்கின்றன. இவை மட்டுமின்றி எழுபத்தைந்து(75) எழுத்துக்கள் ஒலி வடிவிலும், வரி வடிவிலும் அருட்செல்வங்களை, அருளாற்றல்களை, அருட்சத்திகளை, கடவுள்களுக்கும் மனிதர்களுக்கும் தொடர்புகளை உண்டாக்கும் ஏந்துகளை, துணைகளை, சாதனங்களை, சத்திகளை, ..... எல்லாம் வழங்கியுள்ளன. இப்படித் <u>**தமிழ்மொழியில்தான் முன்னூற்று இருபத்திரண்டு (322) எழுத்துக்கள் இருக்கின்றன**</u>. ... ... ...

**[குருதேவர் அறிக்கை: 10]**

**அன்புள்ள சேவுக!**

# குருதேவர் உலகியல் பணி துவங்கிய 12வது ஆண்டு நிறைவுச் செய்தி

அன்புச் சேவுக!

எமது 49வது பிறந்த நாள் செய்தி என்பதை விட, எமது உலகியல் பணி துவங்கிய 12வது ஆண்டு நிறைவுச் செய்தி என்ற தலைப்பிலேயே இந்த அஞ்சலை எழுதுகிறோம் யாம்.

அதிகம் படிக்காதவர்கள், ஏட்டுக்கல்வி கற்க வசதி வாய்ப்பு இல்லாதவர்கள், படித்து விட்டுப் படிப்பைப் பயன்படுத்தி வயிற்றுப் பிழைப்பு நடத்த வசதி வாய்ப்பு கிடைக்காதவர்கள், பாதியிலேயே நாட்டு நடப்புக்குரிய ஏட்டுப் படிப்பைத் தொடர முடியாமல் விட்டு விட்டவர்கள், பிறப்பிலேயே வயிற்றுப் பிழைப்புக்காகப் போராட வேண்டிய பாட்டாளிப் பாமரக் கூலிப் பரம்பரையில் பிறந்ததால் எழுத்து வாசனையே இல்லாத தற்குறி அப்பாவிகள் என்று,...... இந்த நாட்டில் ஏட்டுக்கல்விக்கு அப்பாற்பட்டு வாழ்பவர்களுடனேயே நெடுங்காலம் முழுமையாக வாழ்ந்த நான்; படித்த கூட்டத்தையும், படிக்கின்ற இளைஞர் சமுதாயத்தையும் விரும்பித் தேடி ஓடி வந்து செயல்பட ஆரம்பித்திட்டேன். ஆனால், பன்னிரண்டு ஆண்டுகள் பாடுபட்டும் கூடக் கணிசமான அளவு படித்த கூட்டத்தில் தாய்மொழி, இனம், நாடு, பண்பாடு, உரிமை, பாரம்பரிய மரபு, .... முதலியவைகளைத் தன்னம்பிக்கையோடும்,

தன்மானப் பிடிப்போடும் விரும்பியேற்றுச் செயல்படுபவர்களை உருவாக்க முடியவில்லை! அநேகமாக இனிமேலும் முடியாது! முடியாது!! முடியாது!!! முடியவே முடியாது.

நண்ப! நமது கல்வித் திட்டங்களும், ஆசிரியர்களும், பிற இயக்க நிலைகளும், ..... முழுக்க முழுக்கப் பொறுப்பில்லாத, உண்மையில்லாத, கூலித்தன்மை நிறைந்த, போலிப் பண்புகள் மிகுந்த, தாயகத் துரோக விரோத உணர்வு ஊற்றெடுக்கின்ற ஆற்றலைத்தான் பெற்றிருக்கின்றன. வருங்காலம் இருளும், இன்னலும், அடிமைப்பண்பும், பொதுநல விரோதப் போக்கும், தாயகத் துரோகச் சிந்தைச் செயலும், .... உடையதாகத்தான் இருக்க முடியும்.... இதற்கென்ன செய்வது ......!?!?!? ........

நோயையே சான்றாகவும், முதுமையையே ஊன்றாகவும், வறுமையையே வழித்துணையாகவும் கொண்டு பிச்சையெடுப்பவர் கூட்டம் பெருகிப் பெருகிக் காவிரியின் வெள்ளமாகி விட்டது. வெறும் முரட்டுத் துணிச்சலும், வறட்டுப் பிடிவாதமும் உடைய அனைத்து விதமான குற்றவாளிகளுமே பெரும்பாலும் கலை, இலக்கிய, சமுதாய, அரசியல் தலைவர்களாக, வழிகாட்டிகளாக வளர்ந்து விட்டார்கள். யாருக்குமே வருங்காலத்தைப் பற்றியோ, வரலாற்றுப் பெருமைகளையும் உரிமைகளையும் பற்றியோ கவலையே இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை. இதற்கென்ன செய்வது?

இளமைக்கால உணர்வுகளையும், கோலச் சிந்தனைகளையும் கொன்று புதைத்து விட்டு, எம்மைச் செயல்படச் செய்து எல்லாவிதப் பயிற்சிகளிலும், முயற்சிகளிலும் முதிர்ந்த தேர்ச்சி பெறச் செய்து மனித இனத்தின் முழுமையான அறிவுலக வரலாறாகவே எம்மைத் தயாரித்தார் எம் தந்தை. எமது ஏட்டறிவும், பட்டறிவும் இம்மண்ணுலகின் மாபெரும் அறிவுச் செல்வங்கள், கருத்துக் கருவூலங்கள், வரலாற்றுப் பெட்டகங்கள், அறிவுலகக் கலைக்

களஞ்சியங்கள். ஆனால் யாம் எழுதிக் குவித்தவை எழுத்து மங்கித் தாள் நைந்து சிதைவதைத் தடுக்க முடியாமல் மௌனமாகக் குருதிக் கண்ணீரே வடிக்கிறோம்.

எமது கண்ணீரைத் துடைத்து எமக்கு ஆறுதலும் தேறுதலும் வழங்கும் வண்ணம் முப்பத்தெட்டு எனும் தேவை நிலைக்கு மேல் அ.வி.தி. முகவரிகளுடன் 'பதினெண்சித்தர்களின் பூசாவிதி' வெளி வருவதும்; திங்கள் இருமுறை குருதேவர் ஏடு வெளிவரும் நிலை வளர்ந்திருப்பதும்; நம் இ.ம.இ. அமைப்பினரும் இதனைச் சேர்ந்த பிற அமைப்பினரும் அடிக்கடி தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணங்கள் செய்வதும் நிகழ்ந்துள்ளன. எனவே, எமது பிறந்த நாள் விழா, நமது பணிகளின் நிறைவு விழாவாக, வெற்றி விழாவாக 'இந்துமத மறுமலர்ச்சித் திருவிழாவாக'க் கொண்டாடப்படுவதையே உரிய நிகழ்ச்சியாக ஏற்கிறோம் யாம்.

ஆர்வமும், ஆற்றலும், பொறுப்பும், பொறுமையும், குருவாணை வழிச் செயல்படலும் மிக்க நமது நண்பர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம். அனைத்தும் வெற்றியாகட்டும்! நன்மையாகட்டும்!! உண்மையாகட்டும்!!!

அன்பு

ஞாலகுரு சித்தர் கருவூரார்

[குருதேவர் அறிக்கை: 38]

**அன்புள்ள சேவுகனுக்கு...!**

# மதத்துக்கு உட்பட்டது அரசா? அரசுக்கு உட்பட்டது மதமா?

**அன்புச் சேவுக!**

எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு இவ்வறிக்கையின் மூலம் நாம் மூன்றுண்டுகளே விரைந்து முடித்துவிட்டு; நான்காவது ஆண்டிலே காலடி எடுத்து வைக்கின்றோம், கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பிருந்த நிலையைவிட, இன்றைய நாட்டின் நிலை மிகவும் சிக்கலானதாகவும், சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய வகையிலும் அமைந்துள்ளது. ஏனெனில், நாட்டின் எல்லாத் துறைகளுமே மேலோட்டமாக அமைதியாகக் காணப்பட்டாலும்; உண்மையில் மிகவும் கொடூரமான, இறுக்கமான பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றன.

**நண்ப!**

சமயமும் - அரசியலும் ஒன்றையொன்று நேரடியாக மோதிக் கொள்ளும் காலக்கட்டம் வந்துவிட்டது. மதவாதிகள் ஆங்காங்கே நேரடியாக இன்றைய அரசியலில் ஈடுபடத் துவங்கி விட்டனர். இந்த நிலை குறித்து அரசியல் வல்லுனர்களும், பொருளாதார மேதைகளும், சமுதாயநிலை எழுத்தாளர்களும் மிகத் தீவிரமாக 'சமயம் - அதாவது மதவாதிகள் அரசியலில் ஈடுபடக் கூடாது' என்றும்; 'சமயப் போதகர்களும் குருமார்களும் சட்டமன்றத்தையும் பாராளுமன்றத்தையும் நிர்ணயிப்பதா?'... என்றும் வினவெழுப்பி வருகின்றனர். மேலும், 'சமயக் குருமார்களால்தான் மக்களின் வாழ்வும் வளமும் பாழாகி விட்டதாகவும்; பாழாகி வருவதாகவும்' போலியான, மாயமான வாதத்தை மக்கள் முன் எடுத்து வைக்கின்றனர். இன்றைய நிர்வாகச் சீர்கேடுகளுக்கும்; சமுதாய ஒழுக்கக்

கேடுகளுக்கும் காரணம் இந்த அரசியல் வாதிகளின் ஏமாற்றல்களும், பொருளாதார வாதிகளின் பயனற்றத் திட்டங்களும், சமுதாயநிலை எழுத்தாளர்களின் சீழ்ப்பிடித்தக் கதைகளும் நவீனங்களும்தான் என்பதை மூடிமறைக்கவே இவ்வாறு சிந்துபாட ஆரம்பித்துள்ளனர்.

அண்மையில் புகழ்பெற்ற அரசியல் விமரிசகர் ஒருவர் எழுதுகின்றார், “பஞ்சாப்பின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைப் போடுவது இன்றைய சீக்கிய மத குருமார்கள். எனவே, அவர்களை மக்கள் புறக்கணிக்க வேண்டும். சுத்தமான மக்களாட்சியை நிர்ணயிக்க வேண்டியது மக்களேயன்றி; மதக் குருமார்களல்ல” - என்று கூறுகின்றார்.

இந்தியா விடுதலை பெற்று நாற்பது ஆண்டுகள் ஆகியும் நாட்டில் வறுமையோ, பஞ்சமோ, வேலையில்லாத் திண்டாட்டமோ..... முழுமையாக நீங்கவில்லை, மேலும், அரசியல்வாதிகள் தாங்கள் பதவிக்கு வந்துவிட்டால் முடிசூடா மன்னர்கள் என்பதாகவும்; தங்களைத் தட்டிக் கேட்க நாட்டில் உள்ளவர்களில் எவருக்குமே தகுதியில்லை என்பதாகவும்..... நினைத்து இறுமாந்து வருகின்றனர். இவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களே கூட தட்டிக் கேட்க முடியாத கட்டத்தில்தான் வேறு வழியின்றி சமயவாதிகள் - குருமார்கள் தங்கள் பொற்கோவிலின் மாடங்களை விட்டு மக்களைக் காக்க, அநீதிகளைப் போக்கப் புறப்பட்டு விட்டனர். இதனை மக்களுக்கு உணர்த்தும் பொறுப்பில் உள்ள சமுதாயவாதிகள்தான் இந்த நிலையைக் கண்டித்து போலியான வாதத்தை மக்கள் முன் வைத்துக் குழப்பி வருகின்றனர்.

பதினெண்சித்தர்கள், இந்துமதத்தை சமூக விஞ்ஞானமாகப் படைத்ததே, நாட்டில் ஒழுங்கு விதிமுறைகள் கெட்டுப் போகும் காலத்துக் கண்டித்துத் திருத்துவதற்காகத்தான். இதைத்தான் தமிழக, தமிழின அரசு வரலாற்றில் காண்கிறோம்.

(தொடரும்)

(தொடர்ச்சி) **[குருதேவர் அறிக்கை: 39-40-41]**

## அன்புள்ள சேவுகனுக்கு...!

**அன்புச் சேவுக!**

இதற்காகத்தான், பதினெண்சித்தர் பீடாதிபதிகளும்; அவர்களின் கருவழி, குருவழி, விந்துவழி வாரிசுகளும்; அரச குடும்பத்தினர்களுக்கு குருமார்களாக, குருக்கள்களாக..... இருந்து வந்துள்ளனர். நமது மக்கள் போலியான அரசியல்வாதிகளின் கோரப்பிடியிலிருந்து தப்பிக்க முடியாத காலகட்டங்களில்; மதவாதிகளின் **அரசியல் தலையீடு** அவசியமே!

ஏனெனில், இந்திய விடுதலைக்கு பிறகு; அரசியல்வாதிகள், **'இந்திய விடுதலையே மதத்தின் பெயரால்தான் மக்கள் சத்தியை ஒன்றுதிரட்டிப் பெறப்பட்ட ஒன்று'** - என்ற பேருண்மையை மறந்தும் துறந்தும் செயல்பட ஆரம்பித்திட்டார்கள். குறிப்பாக, இவர்கள், 'ஏறி வந்த ஏணியையே எட்டி உதைப்பது போலத்' தங்களின் வெற்றிக்குக் காரணமாக இருந்த இந்து மதத்தின் ஒற்றுமையையும், உரிமையையும், பெருமையையும், பாரம்பரியங்களையும், நிறுவனங்களையும், மதத் தலைவர்களையும், மதப் பேரறறிஞர்களையும், மத இலக்கியங்களையும், மத நிகழ்ச்சிகளையும், மதச் சின்னங்களையும்..... சிதைக்க, சீரழிக்க, இழித்துரைக்க, பழித்துரைக்க, கேலி செய்ய, கிண்டல் செய்ய, அன்னியர்கள் சூறையாடிடத் தேவையான வாய்ப்பு வசதிகளை வழங்கி வந்துள்ளார்கள்.

நண்ப! ஒழுக்கமோ, நேர்மையோ, நீதியோ, கட்டுப்பாடோ, உண்மையோ..... இல்லாதவர்களாகவே வாழுபவர்கள்தான்; பெரும்பாலும் அரசியல் துறையில் இருக்கின்றார்கள். அவர்கள், நற்பண்புகளில் சிறந்த மதத்துறையினர் என்றாவது ஒருநாள் அரசியல் துறையைப் பிடித்துக் கொள்ள நேரிடுமோ என்று அஞ்ச ஆரம்பித்திட்டார்கள். அதனால்தான், மக்களுக்கு மதத்துறையில்

பற்றோ, பாசமோ, மதிப்போ ஏற்பட்டு விடாமல் இருக்கும் வண்ணம் பார்த்துக் கொள்கின்றார்கள். இதற்காக, அன்னிய மதங்களைக் கொண்டு இந்து மதத்தின் சிறப்பையும், செல்வாக்கையும் தாக்கித் தகர்த்துத் தரைமட்டமாக்கி வருகின்றார்கள். இந்த முயற்சியில், எல்லா அரசியல்வாதிகளும் ஒருமித்த கருத்தினராய் ஒற்றுமையோடு செயல்படுகின்றார்கள். அதாவது, மேடைப்பேச்சு, எழுத்து, நாடகம், திரைப்படம் அனைத்திலும் இந்துமதத் தத்துவத்தையும், செயல்முறைகளையும், தலைவர்களையும், அருளாளர்களையும் இழிவு படுத்துவது, கிண்டல் செய்வது, கேலி பண்ணுவது என்பது மிகமிகச் சாதாரணமாகி விட்டது.

அத்துடன், எப்போதாவது ஏதாவது ஒரு சாமியார் ஒரு சின்னத் தவறை, ஒரு சின்னக் குற்றத்தைச் செய்தால் கூட அதை மிகப் பெரிய அளவில் விளம்பரப்படுத்தி, தரக் குறைவாக விமரிசனம் செய்வது மரபாகி விட்டது. அதே நேரத்தில், அரசியல்வாதிகள் செய்யும் கொலை, கொள்ளை, கையூட்டு, ஏமாற்றல், சுரண்டல், அதிகார முறைகேடு...... முதலிய தவறுகள் மிகமிகச் சாதாரணமாக மலிந்து நிறைந்து கிடக்கின்றன. ‘இவைதான், அரசியல்வாதிகளின் இலக்கணங்கள் அல்லது வாழ்வியல் நடைமுறைகள்’ என்று நம்பி, விரும்பி மக்கள் ஏற்குமாறு செய்து விட்டனர். அதனால்தான் பெரும்பாலான அரசியல்வாதிகள்; பகுத்தறிவுவாதிகளாகவும், சீர்திருத்தவாதிகளாகவும், மத மறுப்பாளர்களாகவும் வேடமிட்டுக் கொண்டு வாழ்கின்றார்கள். அதாவது, மதவாதியாக அல்லாதவன் எந்தத் தவறையும் செய்யலாம் அல்லது எந்தக் குற்றத்தையும் செய்யலாம் என்ற ஒரு தவறான நீதிக் கருத்தை உண்டாக்கி விட்டனர். எனவேதான், இவர்கள், மதவாதிகள் அரசியலுக்கு வரவே கூடாது என்கின்றனர். இன்னும் சொல்லப்போனால், இந்துமத நிறுவனங்களும், நிர்வாகங்களும் மதத்தை வளர்க்கவே கூடாது என்று சொல்கின்றார்கள்.

ஆனால், இந்த அரசியல்வாதிகள் அன்னிய மதங்களுக்கு அளவற்ற மதிப்பும், செல்வாக்கும், சலுகையும் வாரிவாரி வழங்கிக் கொண்டே இருக்கின்றார்கள். அதாவது, இந்த அன்னிய மதத்தவர்களின் ஆதரவு (வாக்குச் சீட்டு = ஓட்டு) தங்களுக்கு அரசியலில் என்றென்றும் தேவை என்பதற்காகவே; இப்படி, அன்னிய மதத்தவர்களை ஆதரிக்கின்றார்கள். அதேநேரத்தில் இந்தியாவுக்குரிய மதங்கள் வளர்ந்தாலோ, வலிமை பெற்றாலோ தங்களுக்கு ஆபத்து என்று நினைக்கின்றார்கள். **எனவே, "மதத்துக்குட்பட்டது அரசா? அரசுக்கு உட்பட்டது மதமா?" - என்பதை இந்த நூற்றாண்டு விரைவில் தீர்மானிக்க வேண்டும்**. அதற்கு மக்களை பக்குவப்படுத்தும் மாபெரும் முயற்சியில்தான் கடந்த இருநூறு ஆண்டுகளாக இ.ம.இ. பாடுபட்டு வருகின்றது.

இ.ம.இ.யின் இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட முயற்சியின் உச்சகட்ட நிகழ்ச்சியாகவே இப்பொழுதைய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. தமிழர்கள் அனைவரும் குருபாரம்பரியம் கூறுகின்ற மூன்று வகையான அமைப்புக்களின் கீழ் செயல்படத் தயாராக இருக்க வேண்டுகிறேன்: 1. தமிழின விடுதலை இயக்கம், 2. தமிழ்மொழி விடுதலை இயக்கம், 3. தமிழ்ப் பண்பாட்டு இயக்கம். இந்த மூன்று இயக்கங்கள் உருவாக்கும் முக்கோண அரணுடைய நகர்தான் அருளாட்சித் திருநகராக இருக்கும். அந்நகர்தான், 'அரசியலுக்கு உட்பட்டது மதமா? மதத்துக்கு உட்பட்டது அரசியலா?' என்பதை நிர்ணயிக்கும். இந்த நிர்ணயிப்பின் கருத்தலைகள், செயலலைகள் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பரவியே தீரும். பிறகு உலகு முழுவதும் பரவியே தீரும்.

**அன்பு**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

[குருதேவர் அறிக்கை: 42-48]

<u>அன்புள்ள சேவுகனுக்கு......!</u>

# <u>யார் வேண்டுமானாலும் பதினெண்சித்தர் பீடத்தின் வாரிசாகலாம்!</u>
# <u>பதினெண்சித்தர் பீடத்தின் வாரிசுகள் யாராகவும் மாறலாம்!</u>

**அன்புச் சேவுக!**

(1) நமது இயக்க முதுபெரும் செயல்வீரர் Dr. S.R. நீலமேகம் பிள்ளை இறப்புக்கு மட்டுமே நம்மவர்கள் சென்றுள்ளார்கள். அதுவும், அனைவரும்; இவர் 'இறைமை' (இறைவன்) நிலையை எய்தியுள்ளவர்; அனைவருமே சித்தி பூசை செய்து கொள்ள வேண்டிய ஆலவாய் மாமூதூர் மதுரைச் சுடலையில் நிலையாக அருவுருவ அருளாட்சி அமைப்புப் பணியாளர்களில் ஒருவராக இருந்திடும் பேறு பெற்றவர்; இச்சுடலையின் பத்தரகாளி, பத்திரகாளி, பத்திறகாளி, ஈசுவரி, ஆண்டிச்சி எனும் அனைவராலும் மதித்து ஏற்றுக் கொள்ளப்பட்டவர்; இ.ம.இ.யின் மூலவரான கருவூரர் வழிவந்த கண்டப்ப கோட்டைச் சித்தர் ஏனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளையின் வழி வந்தவர்; நமது இயக்கத்தில் 'பெரியவர்' என்று போற்றப் பட்டவர்...... என்று தெரிந்து புரிந்திருந்தும் யாருமே மறுநாள் பால்தெளியலுக்குச் செல்லவில்லை!!!

(2) அருளுலகில் சித்திகளைப் பெறுவதற்காக மிகமிகப் பெரிய அரிய உயரிய பூசைகளையெல்லாம் செய்து கொண்டவர்கள் மிகுதியாக உள்ள அருளாட்சித் திருநகரில், வட்டாரத்தில், மாவட்டத்தில்..... இப்படியோர் 'ஏனோ! தானோ?' நிலைக்குரிய நிகழ்ச்சி நடந்து விட்டது!!!...... இதை என்னவென்று விமர்சிப்பது???...... எப்படியெப்படி எண்ணியெண்ணி நமது அகநிலைகளையும் புறநிலைகளையும் பற்றிய புதிய கருத்தோட்டங்களை வழங்குவது?!?!?!......

(3) நம்பிக்கையும், குருவாணை எதுவானாலும் அதனை உடனே முழுமையாக நிறைவேற்றும் போக்கும், எதையும் குருவழியே உணர்ந்து செயலாக்கும் மனமும், எவருக்கும் குருவுக்கே உரிய மேலாண்மை இடத்தைத் தன் வாழ்வில் தராத தரமும், எப்படியும் குருவின் திட்டங்களைச் செயலாக்கிடும் திறமும்.... ஒருசேரப் பெற்ற ஊழ்வினைத் தொடர்புத் தோழா! நண்பா! அடியானே! அன்புச் சேவுகா!.... எந்தப் பீடாதிபதிக்கும் கிடைத்திடாத அளவு மக்கள் தொடர்பு எமக்குக் கிடைத்திடுகின்றது. இதற்குக் காரணம், யாமொருவரே அனைத்து வகையான பாரம்பரியச் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும், மரபுகளையும், முறைகளையும், நெறிகளையும், விதிகளையும், ... தேவைக்கேற்ப முழுமையாக மாற்றியும், திருத்தியும், மீறியும், உடைத்தெறிந்தும்..... மானுடர்களுக்குள் பீடாதிபதியின் தொடர்பால் அருட்செல்வர்கள், அருட்சோலைகள், அருளூற்றுக்கள்..... தோன்றிடும் வண்ணம் வாழுகிறோம். இதில், எண்ணற்ற தோல்விகள், தொல்லைகள், ஏமாற்றங்கள், அவசரப் படைப்புக்கள், அரைகுறைப் படைப்புக்கள்..... என்று எண்ணற்ற வகைகள் உருவாகியுள்ளன. இவையனைத்துமே, எமது வரலாற்றுச் சின்னங்களே! எமது சாதனைகளின் வடிவங்களே! .....

ஏனெனில், 'யாம், யாரையுமே எந்த எதிர்பார்ப்புடனும் உருவாக்குவதில்லை'. எனவே, யார் எந்த அளவு உருவானாலும் மகிழ்ச்சியோடு அவர்களை அருளுலகப் பணிகளுக்காகத் தனித்தும், பிறரோடு பிணைத்தும், எம்மோடு இணைத்துமே செயல்படுத்துகிறோம். இதில், எம்மைப் பொறுத்தவரை எதையும் வெற்றியாகப் பெருமிதப்படவோ! அன்றி, எதையும் தோல்வியாகக் கருதி வருத்தப்படவோ இயலாது. அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பனின் திருவிளையாடலே..... என எண்ணியே நிறைவும் அமைதியும் அடைகிறோம்!

(4) அண்மைக் காலத்தில் நமது இயக்க வரலாற்றில் பிறர் மனம் நோவது பற்றிக் கவலைப்படாமல் விமர்சனம் வழங்கவும்;

முடிவுகளை எடுக்கவுமாகச் செயல்படுகிறோம் யாம். இதற்குக் காரணம்; பதினெண்சித்தர் பீடத்தின் சித்தர் நெறியான சீவநெறியெனும் இந்து மதம் இந்த மண்ணுலகை விடத் தொன்மையானது; மிகமிகத் தெளிவான ஏட்டறிவையும், பட்டறிவையும் பெற்றது. ஆனால், இவையெல்லாம் பழமையானவை; காட்டுமிராண்டிக் காலத்தவை; கரடுமுரடானவை; உலகியலுக்கு அப்பாற்பட்டவை; நடைமுறைக்குச் சிரமமானவை; சாதாரண அறிவு படைத்த சராசரி மனிதரால் புரிந்து கொள்ள முடியாதவை; எல்லோரும் அநுபவத்தில் கையாள முடியாதவை..... என்ற கருத்து விளக்கங்களை அல்லது திறனாய்வுக் குற்றச்சாட்டுக்களைக் காலங்கள் தோறும் பெற்றிடுகின்றன.

குறிப்பாக, 'இறைச்சியுணவு உண்ணல்', 'பலி கொடுத்தல்', 'வழிபாட்டுக்குரிய கடவுள்களே ஆயுதப் புரட்சியையும் குருதிப் போரையும் பரிந்துரைத்தல்', 'துறவுநிலை, உறவுநிலை, மறவுநிலை பற்றிய புரியாமைகள்', 'பெண்ணுக்குத் தரப்படும் அருளுலக நிலைகள்', 'சுடலை வழிபாடு, முன்னோர் வழிபாடு, உருவ வழிபாடு..... முதலியனவற்றின் அறியாமைகள்', ..... என்று சிலவற்றைப் பட்டியலிட்டுக் காட்டலாம். - இப்படிப் பட்டனவற்றிற்கு முறையான விளக்கங்களை நிறைவாகத் தரக்கூடிய மாவீரர்களை உருவாக்கியே தீர வேண்டிய கட்டாய நிலையிலேயே உள்ளோம் யாம்.

எனவேதான், மேற்படி மாவீரர்களை ஏட்டறிவாலும், பட்டறிவாலும் தயாரிப்பதுடன்; அவர்களுக்கு **அருளாற்றலை இட்டும் தொட்டும் சுட்டியும்**, **'குருபாரம்பரிய மரபுப்படி' வழங்கியும்** தயாரிக்கிறோம் யாம். இந்தத் தயாரிப்பு முறைகளில் அவரவர் நம்பிக்கைக்கும், முயற்சிக்கும், ஆர்வத்துக்கும், செயல்பக்குவத் தரத்திற்கும், திரத்திற்கும், திறத்திற்கும், தீரத்திற்கும் ஏற்ப அவரவர் குறிப்பிட்ட அளவு தேர்ச்சியோடு நின்று விடுகிறார்கள். ஆனால், குறிப்பிட்ட சிலராவது விடாமுயற்சியுடன் தொடர்ந்து குருவழியாகச் செயல்பட்டு 'மாவீரர்' என்ற நிலையையும் கடந்து 'படைத் தளபதிகளாக', 'பட்டாள நாயகங்களாக', 'சேனாதிபதிகளாக', 'மாதண்ட நாயகங்களாக', 'வியூக

நாயகங்களாக', 'அணிவகுப்பு நாயகங்களாக', 'படைதிரட்டு நாயகங்களாக', 'பாடிவீட்டு நாயகங்களாக', 'அருளாட்சி அமைப்பு நிறுவனக் காப்பாளர்களாக', 'அருளாட்சி அமைப்பு நிர்வாகப் பொறுப்பாளர்களாக' ... முதிர்ந்த தேர்ச்சி பெற்று அருளுலகத்தாரின் வாழ்த்துதலையும் ஒப்புதலையும் பெற்று; எமது பதிலிகளாகவும், வாரிசுகளாகவும் செயல்படத் தயாராகிடல் வேண்டும். அப்பொழுதுதான், புரட்சியைத் தொடர்ந்து நடத்திடவோ, புரட்சியின் வெற்றிக்குப் பிறகு அருளாட்சியை முறைப்படி முயன்று நிறைவாக அமைத்திடவோ முடியும்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, நாம் தனிமனித வாழ்வுப் புரட்சி, குடும்ப வாழ்வுப் புரட்சி, சமுதாய வாழ்வுப் புரட்சி, அரசியல் வாழ்வுப் புரட்சி முதலிய அனைத்துமே ஒரு 'முழுமையான பண்பாட்டுப் புரட்சி'யாகத்[A Total Revolution]தான் செய்யப் போகிறோம் என்பதால்; இப்புரட்சிகளை நிகழ்த்திட எமது வாரிசுகள், பதிலிகள் என்ற தகுதி பெற்றவர் சிலராவது நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளில் புரட்சிக்குத் தலைமை தாங்கிடல் வேண்டும். அப்பொழுதுதான், தனிமனித வன்முறைகள், தவறுகள், சர்வாதிகாரங்கள், துரோகங்கள், விரோதங்கள், ..... முதலியவையெல்லாம் உடனுக்குடன் தடுத்து நிறுத்தப்பட்டிடும். நமது புரட்சியும் அன்புவழியில், அமைதிவழியில், அறவழியில், அருள்வழியில் ..... ஆக்கப் பூர்வமாக ஊக்கம் குன்றமல் நிகழ்த்தப் பட்டிடும்! நிகழ்த்தப்பட்டிடும்!! நிகழ்த்தப்பட்டிடும்!!!

(5) நமது வளர்ச்சி; ஒரு சில மாவட்டங்களில் எண்ணியே பார்க்க முடியாத அளவுக்கு மிகமிகப் பெரிய உயரிய வலிய நிலைகளைப் பெற்று விட்டது. இதே நேரத்தில்; சில மாவட்டங்களில் இலைமறை காயாகவும், அரைகுறையாகவும் வளர்ந்திருக்கிறது; சில மாவட்டங்களில் மெல்ல மெல்ல மந்தமாகவே வளருகிறது; ஒன்றிரண்டு மாவட்டங்களில் பரவலாகத் தனிமனிதர்களின் வளர்ச்சியே நமது இயக்க வளர்ச்சியாக இருக்கின்றது. இவற்றிற்கெல்லாம் மேலாக, நம்மிடையில் முன்னணிச் செயல்வீரர்களாக இருப்பவர்களுக்கிடையேயே

சிலர் பிற்போக்குச் சத்திகளாகவும், பிளவுச் சத்திகளாகவும், பிரிவினைச் சத்திகளாகவும், குழப்பவாதச் சத்திகளாகவும்; தலைமையின் கீழுள்ள வலிமையான கட்டமைப்புக்களையும், இரகசியமான நிறுவன நிர்வாகச் செயல்முறைகளையும், குருபாரம்பரியச் செயல்திட்டங்களையும் ... தங்களின் அறியாமையால் சீர்குலைப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

இவற்றால், வானுற வளர்ந்துவிட்ட நமது இயக்க நிறுவன நிர்வாகங்கள் ஆங்காங்கே மங்கியும், மயங்கியும், தயங்கியும், தேங்கியும் ..... பல்வேறு வகையான பாதிப்புக்களைப் பெற்றுள்ளன. எனவே, இதற்காக என்னென்ன பரிகாரங்களைச் செய்ய வேண்டுமென்று சத்தி அண்டத்துத் தேவதேவியின் பரிந்துரையைக் கேட்டே; அவசர அவசிய அஞ்சல்களால் செயல் விளக்கங்களும், குருவாணைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, நம்மவர்கள் எந்தப் புதிய கருத்துக்களாலும், திருத்தங்களாலும் வருத்தமடையாமல் செயல்படல் வேண்டும்.

(6) நம்மவர்கள், குறிப்பிட்ட காலம் வரை அவரவரின் சித்திக்காகப் பூசைகளை வீட்டிலும், அருட்கோட்டங்களிலும், ஆலயங்களிலும், கோயில்களிலும், சுடலைகளிலும், புதைகாடுகளிலும் தங்களின் குடும்பத்தாருடன் செய்தால் போதும். எனவே, எக்காரணம் பற்றியும் தலைமைப்பீடத்தின் ஒப்புதலின்றி நம்மவர்களில் யாரும் அடுத்தவருடைய வீட்டிற்குப் போகத் தேவையில்லை. மேலும், நம்மவர்கள், பொது இடங்களில் கூடித் திண்ணைப் பேச்சில் காலத்தை வீணாக்கத் தேவையில்லை. அச்சிட்ட வெளியீடுகளையும், கையெழுத்துப் பிறதிகளையும், அவ்வப்போது வரக்கூடிய அஞ்சல்களையும் மட்டும் படிப்பதற்காகவே நம்மவர்கள் கூடிடலாம். வேறு ஐயங்களுக்கு அவரவர் **நேரடியாகத் தலைமைப் பீடத்துடன்தான் தொடர்பு கொள்ள வேண்டும்**. குருவாணை.

**அன்பு**
**குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

# <u>உடனடியாகத் தேவையான சிந்தனைப் போக்கு</u>

அன்புச் சேவுக!

உன்னோடு உளம் திறந்த, சிந்தை நிறைந்த, அஞ்சல்வழித் தொடர்பு நிகழ்த்துவதில் பல நன்மைகள் விளைகின்றன. முதலாவதாக என்னுள்ளே உள்ள தத்துவப் போராட்டங்கள், சித்தாந்தப் போராட்டங்கள், உலகியல் போராட்டங்கள், முரண்பாடுகளுக்குள் பிறக்கும் முரண்பாட்டுச் சிந்தனைப் போராட்டங்கள், திடீர் திடீரென்று எமது நினைவுக்கு வரும் எமது கேள்வியறிவுச் செய்தி, பட்டறிவுச் செய்தி, ஏட்டறிவுச் செய்தி, ..... முதலியவை உலகுக்குக் கூறப்பட்டேயாக வேண்டுமென்ற ஏக்கப் போராட்டங்கள்,..... முதலியவற்றின் வழிகளாக, அமைதி வழி முயற்சியாக அமைகின்றன யாமெழுதும் அஞ்சல்கள்.

நண்ப! யாம் எமது கடலோடிக் காடோடி, நாடோடி வாழ்வில் அச்ச கூச்ச இச்சை மாச்சரியங்களை இயல்பாகவே கடந்து நடந்து வந்திட்டோம். பதினெட்டாண்டுப் பயிற்சியும், பதினெட்டாண்டு முயற்சியும் நிறைந்து உலகியலில் நடை பயிலும்போதுதான் அனைத்து விதமான அச்ச, கூச்ச, இச்சை, மாச்சரியங்கள் உறவு பூண்டுள்ளன. யாம் தனியாகக் காட்டெருமைக் கூட்டங்களோடு நடந்தும், ஓடியும் விளையாடியதுண்டு; காட்டானைகளின் நீராடுந் துறையில் யாமும் அவற்றோடு நீராடியதுண்டு; வேகமாக ஓடி வரும் வேங்கையையும் வேடிக்கை பார்த்தபடி சென்றதுண்டு. ஆனால், சாதுவாகவும், அழகு செய்து கொண்ட பதுமைகளாகவும், கடமை வீரர்களாகவும், அருள் நெறியினராகவும், அறிவியல் வாதிகளாகவும்,..... வாழுகின்ற மனிதர்களைக் கண்டுதான் புரியாமையால், மயக்க தயக்க தேக்க

உணர்வுகளால், அச்ச கூச்ச இச்சை மாச்சரியங்களால் அலைகடலிடைத் துரும்பாகிறேன்.

நண்ப! நமது நாட்டில், **கோவில்கள்** [48 வகை வழிபாட்டு நிலையங்கள்] நிறைய இருக்கின்றன. **கடவுள்கள்** [48 வகை நிலையினர்கள்] நிறைய இருக்கின்றனர். **அருளை அடைந்த அருளாளர்கள்** [48 வகை அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள்; 48 வகை மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள்; 48 வகை அருட்பட்டத்தவர்கள், 13 வகைச் சித்தியாளர்கள் .....] நிறைய இருக்கின்றனர். **மதத்தின் தலைவர்கள்** [மடாதிபதி, பீடாதிபதி, சன்னிதானம், ஆதீனம், தம்பிரான், பண்டாரம்,..... என 48 வகையினர்] நிறைய உள்ளார்கள். மதக் கல்வி, கலை, அறிவியல் முதலியவைகளை முறைப்படி விளக்கி, வழங்கி, வளர்த்திடும் **ஆசிரியர்கள், குருமார்கள், ஆச்சாரியார்கள்,** [48 வகைப் பதினெண்சித்தர் பீடாதிபதிவழி ஆச்சாரியார்கள்; 13 வகைக் கருவழி ஆச்சாரியார்கள், 13 வகைக் குருவழி ஆச்சாரியார்கள், இதுவரை தோன்றியுள்ள 12 பதினெண்சித்தர் பீடாதிபதிகள், 48 வகைச் சித்தர்கள், பதினெண்சித்தர்கள், பதினெட்டாம்படிக் கருப்பர்கள்.....] நிறைய உள்ளார்கள் ..... ஆனால், **இந்து மதத்துக்கென்று நிறுவனக் கட்டமைப்புக்களையும், நிர்வாக ஒழுங்கமைப்புக்களையும் உடைய இயக்கம் இந்தியா தழுவியும், உலகம் முழுவதும் பரவியும்..... ஒன்று கூட உருவாக வில்லை! உருவாக வில்லை! உருவாக வில்லை!** இல்லை; இல்லை; இல்லை; ஏன்? ஏன்? ஏன்? .....

நண்ப! மேலே எழும்பியுள்ள ஏன்? ஏன்? ஏன்? ..... என்ற வினவுக்கு எம்மைத் தவிர அல்லது நம்மைத் தவிர வேறு எவராலும் விடையைக் கூற இயலாது! இயலாது! இயலாது! இயலவே இயலாது! இதுதான் உண்மை! பேருண்மை! சத்தியம்! இன்னும் சொல்லப் போனால், மேலே நாம் எழுப்பியுள்ளது போல்

ஒரு வினவை எழுப்புவதற்குக் கூட இந்துக்களில் எவராலும் முடியாது! இயலாது! முடியவே முடியாது! இயலவே இயலாது! ஏனெனில், நமது இந்துக்கள் முடக்குவாத நோயால் நடக்க முடியாது போனவர்கள் போல் மடமைகளால், ஏமாற்றுக்களால், பொய்களால், மூடப் பழக்கவழக்கங்களால்; கண்மூடித்தனமான கற்பனைகளால், சிந்தனைச் சிறகு ஒடிக்கப்பட்ட பறவைகளாக, கால்களில் விலங்குகள் பூட்டப்பட்டு இருள் நிறைந்த சிறைச் சாலைகளுக்குள் அடைக்கப்பட்ட ஆயுட் கைதிகளாக, எதையும் காணாத பிறவிக் குருடர்களாக..... ஆக்கப்பட்டு விட்டார்கள், பிறமண்ணினரான பிருமணர்களால்! எனவேதான், நமது பணிகள் பன்னிரண்டு ஆண்டுகளாகியும், பட்டிதொட்டி குக்கிராமங்களில் எல்லாம் வளவளர்ச்சி பெற்றும் கூட ஏட்டுலகிலும் [பத்திரிகைகள், படித்த மக்கள்], நாட்டு நடப்பிலும் உரிய விளம்பரமோ, வளர்ச்சியோ பெற முடியாத நிலை இருக்கிறது! இருக்கிறது! இருக்கிறது!.... இனி எவ்வளவு காலம் இந்நிலை இருக்கும்?!?!....

நண்ப! தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் இந்துமதத்தார் மீது கொண்டிட்ட அளப்பரிய ஆர்வத்தாலும், நல்லெண்ணத்தாலும்தான் விரைந்தும் விரிந்தும் இந்துமதக் கேடுகளையெல்லாம் அகற்றும் பணியில் ஈடுபட்டிட்டார். ஆனால், அவர் எரியும் நெருப்புக்குள் கையை வைக்கப் போகும் குழந்தையைத் தாய் அவசர அவசரமாகத் தூக்கித் திட்டி நாலு அடி கொடுத்து “இனிமேல் அடுப்பினருகில் போகாதே; போனால் கொன்று போடுவேன்”... என்று பாசத்தால் பதறிச் செயல்படுவது போல் செயல்பட்டிட்டார். அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் பிறமண்ணினரான பிருமணர்கள். அதாவது, அப்பாவிகளாகவும், ஏமாளிகளாகவும், மூடநம்பிக்கைக் காரர்களாகவும், அறியாமை மிகுந்தவர்களாகவும் இருந்த இந்துக்களிடம் “<u>பெரியார் ஈ.வெ.ரா. ஒரு நாத்திகர், கடவுள் மறுப்பாளர், மத வெறுப்பாளர், அருளுலகைக் கேலியும்</u>

கிண்டலும் செய்பவர், மதவாதிகளுக்கு விரோதி.....” என்றெல்லாம் பழி கூறிப் பெரியாரின் அரிய, பெரிய, சீரிய, நேரிய, பெரிய சிந்தனைகளையும், தத்துவங்களையும், சீர்திருத்தத் திட்டங்களையும் செல்வாக்குப் பெற முடியாமல் செய்திட்டார்கள். இதனால், 96 வயது வரை போரிட்ட அவர் வெற்றி தோல்வி இன்றித் தொடர்ந்து போர் நடக்க ஏற்பாடு செய்திட்டார். ஆனால், அவர் உருவாக்கிய வாரிசுகள் அவரையே புரிந்து கொள்ள முடியாதவர்களாக சிறுபிள்ளைத் தனமான விளையாட்டுச் செயல்களில் அனைத்தையும் வீணாக்குகிறார்கள். எனவேதான், நாம் ‘தந்தை பெரியார் திராவிடர் கழகம்’ என்ற இயக்கத்தைத் தோற்றுவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது.

நண்ப! இவ்வாறு இந்து மதத்தை வளர்க்க வேண்டிய ஆத்திகர்களும்; இந்துமதத்தைச் சீர்திருத்த முற்பட்ட பகுத்தறிவு வாதியினர், நாத்திகர்கள், கடவுள் மறுப்பாளர்கள், சிந்தனையாளர்கள், சீர்திருத்த வீரர்கள்..... முதலியவர்களும்; இந்து மதத்துக்கு நிறுவனக் கட்டமைப்பையோ, நிர்வாக ஒழுங்கமைப்பையோ உருவாக்க இயலாதவர்களாக, முடியாதவர்களாக ஆகிவிட்டார்கள். எனவே, நமக்குத்தான் அம்மாபெரும் பொறுப்பு வந்துள்ளது. நாம், நமது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கீழ் பதின்மூன்று வகை அமைப்புக்களை உருவாக்கிச் செயல்படுகிறோம். இது போதாது; இன்னும் பல நிறுவனங்களைக் கழகமாக, கட்சியாக, சங்கமாக, மன்றமாக, குழுவாக, திருநெறிக் கூட்டமாக, திருச்சபையாக, இயக்கமாக,..... விரைந்து உருவாக்கிச் செயல்பட்டேயாக வேண்டும். அப்பொழுதுதான் பல்வேறு நிலையினர்களையும் ஒருமுகப் படுத்தி இந்து மதத்துக்கென நல்ல ஓர் அமைப்பை உருவாக்க இயலும்.

நண்ப! ஏறத்தாழ எல்லா மதத்து இளைஞர்களும் துப்பாக்கியைத் தோளிலும், தோட்டாச் சரங்களைக் கழுத்தில் மாலையாகவும், இடுப்பில் பட்டியாகவும் மாட்டிக் கொண்டு ஆயுதப் புரட்சியில் நம்பிக்கை

கொண்டுள்ளார்கள். ஆனால், நாமோ 43,73,086ஆண்டுகளாக (1985இல்) '<u>நாம் வழிபடும் கடவுள்கள் ஆயுதமேந்திப் போர்க் கோலத்தில்தான் வழிகாட்டுகிறார்கள்</u>' என்பதையும்; '<u>நமது புராண இதிகாசங்கள் அனைத்தும் ஆயுதப் போரின் மூலம்தான் நேர்மையையும், நீதியையும் நிலைநாட்ட முடியும்</u>' என்ற தத்துவ விளக்கமாக இருப்பதையும் தெளிவாகப் புரிந்து **"ஆயுதப் போர் கூடாது! காயுதப் போர்தான் தேவை"** என்ற முடிவான கருத்தை நமது தத்துவமாக வழங்குகிறோம். இந்தக் காயுதப் போர்த் தத்துவம்தான் 'சித்தர் நெறி' எனப்படும் இந்துமதம்.

அதாவது, 'தத்துவப் புரட்சி', 'கருத்துப் போர்', 'முரண்பாட்டுச் சண்டை', 'கொள்கைச் சிக்கல் போக்கு', 'சர்ச்சை', ..... என்று <u>அனைத்துமே பேச்சின் மூலம், எழுத்தின் மூலம்தான் தீர்க்கப் பட்டிடல் வேண்டுமே தவிர; ஆயுதப் புரட்சி, வன்முறை, அழிவு, சிதைவு,..... முதலியவை கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது!.....</u> என்று வலியுறுத்திக் கூறுவதுதான் பதினெண்சித்தர்கள் படைத்த '<u>இந்துமதம் என்கின்ற சித்தர் நெறி</u>'. எனவே, மக்களை அன்பு வழியில், அற வழியில், அமைதி வழியில், சமாதான வழியில், சகோதரத் தத்துவ வழியில், சமத்துவ வழியில்..... செயல்படச் செய்து மானுட இன ஒற்றுமை, பற்று, பாசம், நளின மெலினம், கனிவு, அழகு, அன்பு, கூட்டு வாழ்வு, உண்மை உறவு, பெருமைமிகு உரிமை..... முதலியவைகளை வளவளர்ச்சியும், வலிமைச் செழிச்சியும் அடையச் செய்யும் ஆற்றல் **<u>பதினெண்சித்தர்களின் சித்தர் நெறி என்கின்ற இந்து மதத்துக்குத்தான் உண்டு</u>**..... என்பது தெளிவாகிறது.

நண்ப! <u>இன்றுள்ள குழப்பமெல்லாம் இந்துமதத்தின் பெயரால் வாழும் ஆச்சாரியார்கள், சன்னிதானங்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள், ஆதீனங்கள், தம்பிரான்கள், குருமார்கள், பூசாரிகள், ஓதுவார்கள்,</u>

தேசிகர்கள், பண்டாரங்கள்..... முதலியோரும்; **இந்து மதத்துக்கென உருவாக்கப் பட்டுள்ள கட்சிகளின் தலைவர்களும்**..... இந்து மத வரலாறு, இந்து மதத் தத்துவம் [Philosophy], சித்தாந்தம் [Theology], ஒழுகலாறு [Way of Life], மரபு [Traditions], சடங்கியல் [Rituals], கொள்கை [Policy], நம்பிக்கை [Faith and Belief] ..... முதலியவைகளை விளக்கும் பாரம்பரிய மரபுகளையோ! செவிவழிச் செய்திகளையோ! மறைகளையோ! நடைமுறைகளையோ! இலக்கியங்களையோ! தேவையான அளவு கூடத் தெரிந்து கொள்ளாதவர்களாகவே இருக்கிறார்கள்.

அதாவது, **இந்து** என்ற சொல்லுக்குப் பொருளோ! அச்சொல்லின் வரலாறோ!, அச்சொல் குறிக்கும் மதத்தைப் பற்றிய பேருண்மைகளையோ!..... தெரியாதவர்கள்தான் பெரும்பாலும் இந்து மதத்தின் வழிகாட்டிகளாக, வழித்துணைவர்களாக, வழிபாட்டுக்குரிய தலைவர்களாக இருக்கிறார்கள். எனவேதான், இந்து மதத்தவர் தன்னம்பிக்கையோ! மதப்பற்றோ!, மதவாழ்வில் பாசப்பிடிப்போ!, மத ஒற்றுமையில் பேரார்வமோ!..... இல்லாமல் நெல்லிக்காய் மூட்டை போல் எந்தநேரமும் தனித்தனியாகச் சிதறியோடும் தன்மை படைத்தவர்களாக இருக்கிறார்கள். இவர்களைத் திருத்தும் தரமோ, பக்குவமோ, அறிவாற்றலோ, ஆர்வமோ, உரமோ, தீரமோ, வீரமோ..... இல்லாதவர்கள்தான் இந்துமதத்தின் வழிபாட்டுக்குரிய தலைவர்களாக, வழிகாட்டிகளாக, துணைவர்களாக உள்ளார்கள்! உள்ளார்கள்! உள்ளார்கள்!

இவற்றிற்கெல்லாம் காரணம் இந்துமதத்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தமிழ் மக்களின் கையில் இந்து மதம் இல்லை. தமிழர்களும் வரலாற்றறிவோ, ஆராய்ச்சியுணர்வோ, உண்மை காணும், பேணும் ஆற்றலோ.... இல்லாமல் இந்து மதம் தங்களுடையதுதான் என்று புரியாமல், இந்து மதத்தை மறுக்கவும்,

வெறுக்கவும், எதிர்க்கவும், பகைக்கவும், நகைக்கவும்..... செய்கிறார்கள். எனவே, இந்துக்கள் தங்கள் மதத்தைக் காத்திட வேதமதப் பிருமணர்களையே தங்களுடைய மதத் தலைவர்களாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள். இதுதான் கொடுமையிலும் கொடுமை! இழப்பிலும் இழப்பு! அதாவது, *பலியாகப் போகும் கிடாய் தன்னை வெட்டப் போகும் கொலையாளியைப் பாசத்தோடு நக்கிக் கொடுப்பது போன்றுள்ளது இந்நிலை.*

நண்ப! பிறமண்ணினரான பிருமணர்கள் தங்களுடைய வேத மதத்தைப் பரப்பி இந்தியாவின் பூர்வீகக் குடிகளான தமிழர்களின் அகப் பண்பாட்டையும், புற நாகரீகத்தையும், அறிவியலையும், கலையையும்,..... விளக்கி வளர்க்கும் **மெய்யான இந்து மதத்தைச் சிதைத்துச் சீர்குலைத்துச் சீரழித்திட முயலுவதை அப்பாவித் தமிழர்களே ஏற்றுப் போற்றித் துணை போகிறார்கள்.** இந்த வரலாற்றுக் குழப்பத் தாழ்ச்சி வீழ்ச்சி நிலைகள் பிருமணர்களின் சூழ்ச்சிகளால் மட்டும் விளைந்தவையல்ல! தமிழரின் அப்பாவித் தனத்தாலும், ஏமாளித் தனத்தாலும், ஒற்றுமையின்மையாலும், தனிமனிதப் பேராசைகளாலும், தனிமனிதத் தன்னலச் செயல்களாலும், தனிமனிதத் துரோகங்களாலும், மொழிப் பற்றின்மையாலும், இனப் பற்றின்மையாலுமே விளைந்தன. எனவேதான், மேற்படி வரலாற்றுக் குழப்பங்களைத் தீர்க்கும் முயற்சியே பிறக்கவில்லை.

நண்ப! எல்லாக் கோயில்களிலும் கூட்டம் நிரம்பி வழிகின்றது. எல்லாவிதமான மதத் திருநாள்களும், திருவிழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. தனிமனித வாழ்வியல் நிகழ்ச்சிகள், குடும்ப வாழ்வியல் நிகழ்ச்சிகள், சமுதாய வாழ்வியல் நிகழ்ச்சிகள், அரசியல் நிகழ்ச்சிகள், தொழில் நிகழ்ச்சிகள்..... முதலிய அனைத்துமே சமயச் சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகளுடன்தான் நிகழுகின்றன; ..... ஆனால், மதக் கருத்துக்களும், கொள்கைகளும், நம்பிக்கைகளும்,

பழக்க வழக்கங்களும், இலக்கியங்களும் பொதுவாகக் கேலிக்கும், கிண்டலுக்கும், தாக்குதலுக்குமே உரியனவாகின்றன. இன்னும் சொல்லப் போனால்; மேலெழுந்தவாரியாகக் கடவுள் மறுப்பும், மத வெறுப்பும், மதத் தலைவர்களுக்கு எதிர்ப்புமே நாட்டு நடப்பில் இருக்கின்றன. 'இப்படிப்பட்ட ஒரு மாபெரும் முரண்பாடு எப்படி உருவாயிற்று?, எவ்வாறு தொடர்ந்து வாழ்ந்து வருகிறது?' ..... என்பதைப் பற்றிச் சிந்திக்கும் எண்ணமோ, துணிவோ, தெளிவோ, தரமோ, உரமோ, நிறைவோ, மறமோ, ..... ஏறத்தாழ எவரிடமுமே இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

இத்தகைய அவலக் கேவல இருள் நிலையில்தான் நாம் மத மறுமலர்ச்சிப் பணியைத் துவக்கியுள்ளோம். எனவே, நமக்கு மதவாதிகளிடமிருந்தும் ..... எதிர்ப்புக்கள் ஏற்படத்தான் செய்யும்! இவற்றை, எண்ணிக்கையில் சிலராகத் தேர்ந்தெடுக்கப்படும் நமது அடியான், அடியாள், அடியார் ..... முதலியோர்க்கு நல்ல வளமான, வலிவான ஏட்டறிவையும் பட்டறிவையும் வழங்கித் திட்டமிட்ட செயல்முறைகளில் செயல்படச் செய்வதே உரிய வழி!

நண்ப! நாம் மத வரலாறு, மத இலக்கியம், மதத் தத்துவம், மதச் சித்தாந்தம், மத அறிவியல், மதக் கலை..... முதலியவைகளை எழுதியும், பேசியும் வளர்த்துத்தான் உண்மையான மதவாதிகளை உண்டாக்க வேண்டும். இந்த உண்மையான மதவாதிகளைக் கருவியாகக் கொண்டுதான் மத இயக்கக் கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டும்.

நண்ப! இந்து மதம்தான், நமது மக்களைச் சாதிவெறி, தவறான மதவெறி, அரசியல் கட்சிவெறி..... முதலியவைகளிலிருந்து காப்பாற்றிடும். அப்பொழுதுதான், உண்மையான பற்று, பாசம், ஒற்றுமை, கட்டுக்கோப்பு முதலியவை உருவாகும்.

நண்ப! ஏறத்தாழ எல்லாருமே சமத்துவத்தையும், பொதுவுடைமையையும் விரும்புகிறார்கள். ஆனால், இந்தத் தத்துவம்

ஏட்டுலகில் எப்படி இருக்கிறது? நாட்டு நடப்பில் எப்படி இருக்கிறது? என்பதை எவரும் பொறுமையோடும், பொறுப்போடும் இருந்து ஆராய்ந்து அறியவில்லை. அதனால்தான் உண்மையான சமத்துவத் தத்துவமும், பொதுவுடமைத் தத்துவமும் மக்களுக்குத் தெரியவில்லை. அதற்காக, அரசியல் வாதிகளோ, மேற்படித் தத்துவங்களுக்குரிய கட்சிகளோ, இயக்கங்களோ முயற்சிக்கவில்லை. ஆனால், இவர்கள் மந்திரவாதிகள் உச்சரிக்கும் மந்திறங்கள் போல்; '*சமத்துவம்*', '*பொதுவுடமை*' என்ற சொற்களை மட்டும் உச்சரித்தே பிழைப்பு நடத்துகிறார்கள்.

இவர்களைப் போலத்தான் நமது இந்து மதத் தலைவர்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் அனைவருமே உண்மையான இந்துமத வரலாறு, தத்துவம், அறிவியல், கலை, இலக்கியம், நடைமுறை..... முதலியவைகளை விளக்காமல்; விழாக்கள் கொண்டாடியும், கதைகள் கூறியும், விளக்கவுரைகள் வழங்கியும்..... வயிறு பிழைக்கிறார்கள். இதைத் தடுத்து நிறுத்தி அறிவுப் புரட்சி! அருட் புரட்சி! ... ஆன்மீகப் புரட்சி! மெய்ஞ்ஞானப் புரட்சி! மதப் புரட்சி! ..... முதலியவைகளைச் செய்ய வேண்டும் நாம்.

**அன்பு**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்**
**21/10/1985**

<u>நகல் எழுதியது</u>:-
M.R.சீனிவாசன் R.M.P.
முசிறி P.O., திருச்சி Dt.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: முசிறி சித்தரடியார் திரு M.R.சீனிவாசன் R.M.P. அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# <u>ஆயுதப் புரட்சியல்ல!</u>
# <u>காகிதப் புரட்சி!</u>

அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் அவர்களுக்கு பல்லவப் பெருமண்டலத்து குருவாணை ஓலைநாயகம், தொம்பரத்தம்மன் சன்னிதானம் எழுதுவது: உங்கள் மூலமாக மற்ற எல்லா சன்னிதானங்களுக்கும் அனுப்ப முற்படுங்கள்.

1) ஆத்தாக்கள் தாத்தாக்கள் அருளால் நலம்! நலமறிய அவா!

நீண்ட இடைவெளிக்குப் பிறகு குடும்பத்தில் உள்ள சிக்கல் காரணமாக, தாய் குருதேவரை சந்திக்கக் கூடாது என்ற அடங்காப் பிடாரியின் காரணத்தால்; தேர்வில் வெற்றி பெறவில்லை என்ற காரணத்தால் குடும்பத்திலுள்ளவர்களை எதிர்க்க முடியவில்லை. தெரிந்தும் தெரியாமலும் இரண்டு மாத காலமாக குருதேவரின் அருகிலேயே இருக்கிறேன். இரவிக்கு தேர்வு நேரமாகி விட்டதால் அவனைப் படிக்கச் சொல்லிவிட்டார். எங்கு குருதேவரைப் பார்ப்பது? குடும்பத்தில் உள்ளவர்களுக்குத் தெரிந்தால் நேரடியாக வந்து சண்டை போடுவார்கள் என்ற அச்சம் வேறு ஒரு பக்கம்; இந்தக் குழப்பமான நிலையில் குருதேவரைச் சந்தித்து அவர் அருகிலேயே இருக்கிறேன்.

நான் வரும் பால்குடவிழாவில் குருதேவருடன் அங்கு வர முயற்சி செய்கிறேன். எல்லாம் ஆத்தாக்கள் தாத்தாக்கள் செயல். இதற்குமேல் எழுதப் போவது ஐயா சொல்லி நான் எழுதியது:

2) நம் இயக்கத்தில் உள்ள ஒவ்வொருவரும் குறைந்தது வாரம் ஒருமுறையாவது நமது இயக்கத்தின் கொள்கைத் துண்டுப் பிரசுரங்களை மக்களுக்குக் கொடுத்தால் நாம் யார் என்பதை ஓரளவாவது மக்கள் புரிந்து கொள்வார்கள். 'குருதேவர் ஆண்டுமலருக்கு' முன் கூட்டியே

அவரவர்களுக்குத் தெரிந்தவரிடம் புத்தக ஆர்டர் (order) பெற்ருல் கூட மிக நன்ருக இருக்கும் என்று குருதேவர் நினைக்கிருர். நமது இயக்கத்தில் உள்ள அனைவரும் வாரம் ஒருமுறையாவது பொதுமக்களுக்கு மந்திரிக்க வேண்டும். அதில் அவர்கள் (அவரவர் விருப்பப்படி) கொடுக்கும் தொகையாவது இயக்க வளர்ச்சிக்கு உதவும். ஒருவன் சைக்கிளை வாங்கி அதை உபயோகப்படுத்தாமல் வைத்திருந்தால் அது துப்பு ஏறி உபயோகப் படாமல் போய்விடுமோ, அதுபோல் சன்னிதானப் பட்டம் பெற்றவர்கள் வாரம் ஒருமுறையாவது மந்திரிக்க வேண்டும். அப்பொழுதுதான் அது பயன் உள்ளதாக இருக்கும்.

3) என்னைப் போலவே பலரும் இ.ம.இ. பணிகளில் முழுமையாக ஈடுபட முடியாத போராட்ட நிலையில் வாழுவார்கள் என்பதை எண்ணிப் பார்த்தே '<u>என் தன்னிலை விளக்கமாக</u>' இந்த மடலை எழுதுகிறேன். அதாவது, நம்மவர்களில் விலகிச் சென்றவர்களும், விலகியிருப்பவர்களும் பல்வேறு காரணங்களால் தற்காலிகமாகவே தாங்கள் விலகியிருப்பதாக உணரும் வண்ணமே; நம்மவர்கள் நம்மோடு அறிமுகம் பெற்ற அனைவரோடும் தொடர்ந்து ஏட்டாலும், பேச்சாலும் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். ஏனென்ருல், நாம் தமிழினம், தமிழ்மொழி, தமிழ்நாடு, உலக ஆதிச் சமயமான இந்துமதம் என்ற கட்டுக்கோப்பில் உலகம் தழுவிய மறுமலர்ச்சிப் பணிகளைச் செய்கிருேம். இதில் எல்லோருமே உரிமையோடும், பெருமையோடும் பங்கு எடுத்துக் கொள்ளும்படி செய்ய வேண்டியது நம் கடமை. இது அடியேனின் தாழ்மையான வேண்டுகோள்.

4) நாம் ஆயுதப் புரட்சிக்கு மக்களைத் தயாரிக்கவில்லை என்பதை அனைவரும் உணர்ந்து நம்பி நம்மோடு செயல்படச் செய்ய வேண்டும். இதற்காகத்தான் நமது குருதேவர் இரவு பகலாக எழுதிக் குவித்து காகிதப் புரட்சி செய்கிருர். இந்தக் காகிதப் புரட்சி வெற்றி பெற வேண்டுமென்ருல், நம்மவர்களில் அழகான கையெழுத்து ஆற்றல்

உடையவர்கள் குருதேவர் எழுதிக் குவித்துள்ளவைகளில் சிலவற்றையாவது அவ்வப்போது நகல் எடுத்து உண்மையான மனித நல ஊழியர்கள் என்று கருதப்படுபவர்களுக்கு அனுப்பிடல் வேண்டும்.

இதுபோல் வாய்ப்பில்லாதவர்கள் நாம் அச்சிட்டு வைத்திருக்கக் கூடிய புத்தகங்களையும், அறிக்கைகளையும், மாத வெளியீடான குருதேவர் ஏட்டையும் கையில் எடுத்துக் கொண்டு புகைவண்டி நிலையம், பேருந்து நிலையம், திருவிழாக் கூட்டம், கோயில்கள், பிற பொதுக்கூட்டங்கள்,...... முதலிய இடங்களில் நின்று "... 'இந்துமத மறுமலர்ச்சிக்காக', 'தமிழின விடுதலைக்காக', 'தமிழ்மொழியின் உரிமைக்காக', 'தமிழ்நாட்டின் பெருமைக்காக', 'மானுடச் சமத்துவத்திற்காக', 'மானுட ஒற்றுமைக்காக', ... இதை வாங்கிப் படியுங்கள்! வாங்கிப் படியுங்கள்! வாங்கிப் படியுங்கள்!" என்று கூவிக் கூவி விற்க வேண்டும். <u>என்னைப் பொறுத்தவரை எதையும் இனமாகக் கொடுப்பதினால் பயன் வராது! பயன் வராது! பயன் வராது! விலை கொடுத்து வாங்குபவர்களே முழுவதையும் படித்துப் பார்ப்பார்கள்; முடிந்தவரை பயன்படுத்திப் பார்ப்பார்கள்</u>. இது அடியேனின் அன்பு வேண்டுகோள். தாங்கள் அ.வி.தி. தலைமைச் செயலாளர் என்பதால் வாரக் கூட்டங்களிலும், மாதக் கூட்டங்களிலும் இந்த அஞ்சலை படித்துக் காட்டி விவாதித்த பிறகு எனக்கு அஞ்சல் எழுதுமாறு வேண்டுகிறேன்.

5) பெருமதிப்பிற்குரிய பரமாச்சாரியார் அவர்களே! நமது குருதேவர் அடிக்கடி "நாம் முழுக்க முழுக்க மதவாதிகளாகவே செயல்பட்டுச் சென்றிடக் கூடாது. நாம் <u>ஆண்டவர்களை</u>ப் பற்றி மட்டும் பேசி விட்டுச் சென்றுவிடக் கூடாது; <u>ஆள்பவர்களையும், ஆளப் போகிறவர்களை</u>யும் பற்றியும் பேச வேண்டும். நாம் ஆண்டவர்களையே பெரியவர்கள் என்று கூறிக் கொண்டிருக்கக் கூடாது; இன்றைய வாழ்வில் பல பெரியவர்களை உருவாக்க வேண்டும். வருங்காலத்தில் என்றென்றும், காலங்கள் தோறும் பெரியவர்கள் பலர் அனைத்துத்

துறைகளிலும் தோன்றிக் கொண்டே இருக்கும் வண்ணம் முழுமையாகச் செயல்பட்டிடல் வேண்டும். நம்மை வாய்ச்சொல் வீரர்களாகவோ! பழங்கதை பேசுபவர்களாகவோ! கனவுலக வாதிகளாகவோ! முரட்டுப் பிடிவாதக்கார வறட்டு வேதாந்திகளாகவோ! முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடும் மூடநம்பிக்கைக் காரர்களாகவோ!..... யாரும் குறைகூறிக் குற்றம் சாட்டிடா வண்ணம் வாழ வேண்டியவர் நாம். எனவே, நாம் எந்தப் புதிய பயனுள்ள தத்துவத்தையும், சித்தாந்தத்தையும் முழுமையாக வரவேற்று ஒப்புக்கொண்டு செயல்படுத்தும் புரட்சிச் சிந்தனையாளர்களாகவே வளர வேண்டும்! வளர வேண்டும்! வளர வேண்டும்!.....” என்று கூறிடுவதை ஒவ்வொருவரும் சிறிய சிறிய கையெழுத்துப் பிறதிகளாகவோ அல்லது அச்சிட்டுப் பிறதிகளாகவோ, எப்போதும் கையில் தயாராக வைத்திருந்து; நம்மைச் சந்திப்பவர்களிடம் கொடுத்து; நம்மையும், நமது கொள்கைகளையும், குறிக்கோளையும், நமது தலைவரான தத்துவ நாயகரையும், நமது பிற செயல்திட்டங்களையும் அறிமுகப்படுத்த வேண்டும்! அறிமுகப்படுத்த வேண்டும்! அறிமுகப்படுத்த வேண்டும்!

எனக்கு பொருள்வசதி ஏற்படும் பொழுது குருதேவரின் இந்த ஒரு கருத்துரையையாவது பல நூறுயிரக் கணக்கான அறிக்கையாக (Notice) அச்சிட்டு வழங்குவேன்! வழங்குவேன்! வழங்குவேன்! ஏனென்றால் மதவாதிகள் நம்மைப் புரட்சிவாதிகள், சீர்திருத்தவாதிகள் என்று சொல்லி ஒதுக்கி விடுகிறார்கள். இதுபோலவே, சீர்திருத்தவாதிகளும், புரட்சிவாதிகளும் நம்மை மதவாதிகள் என்று நினைத்து ஒதுக்கி விடுகிறார்கள். இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு எத்தனை காலம் நிகழ்வது? இதற்கு ஒரு முடிவுகட்டப் பட்டேயாக வேண்டும்.

அதாவது, நம்மவர்கள் வெறிகொண்டு தனிமனிதர்களாகவோ, சிறுசிறு கூட்டமாகவோ, நம்மை பொதுமக்கள் கூடும் பொது இடங்களில் அறிமுகப் படுத்திக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடல்

வேண்டும்! ஈடுபடல் வேண்டும்! ஈடுபடல் வேண்டும்! ஈடுபட்டேயாக வேண்டும்! இதற்காக அவரவர் வசதி வாய்ப்புகளுக்கேற்ப அனைவரும் முயற்சிகள் செய்ய வேண்டும் என்று அன்பு வேண்டுகோள் விடுக்கிறேன். இதன்படிதான் இப்பொழுது நான் நிறைய நகல்கள் எழுதும் பணியில் ஈடுபட்டு உள்ளேன். நான் விரைவில் பொறுப்பான பணியில் அமர்ந்து முழுவெறியோடு, எரிமலைபோல் குமுறிச் செயல்படுவேன்! செயல்படுவேன்! செயல்படுவேன்! நம்மவர்கள் செய்யும் பூசைகளில் இன்றைய இக்கட்டான நிலை உடைத்தெறியப் படுவதற்காக அருளுலக அறிவிப்புக்களைச் செய்து அருள் வழங்குமாறு வேண்டுகிறேன்.

6) ஐயா! தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அனைத்துத் துறைகளைச் சேர்ந்த தலைவர்களும் தன்னல வெறியினால் ஏதாவது ஒருவகை ஊழல் பேர்வழிகளாகவும், கள்ளச்சந்தைக் காரர்களாகவும், கறுப்புப்பணக் காரர்களாகவும்தான் வாழ நேரிட்டுள்ளது. அதாவது, சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் எந்தத் தலைவனும் நல்லவனாக வர முடியாத நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட இழிநிலைகளையும், அழிநிலைகளையும் முழுமையாக அழிக்கக்கூடிய சத்தியும், திறமையும், வீரமும் மதவாதிகளிடம்தான் இருக்கின்றது! இருக்கின்றது! இருக்கின்றது! எனவே, மதத்துறையும் வளமும், வலிவும், பொலிவும் பெற்று அனைத்தையும் அடக்கி ஆளக்கூடிய பேராண்மைநிலை, ஆட்சிநிலை உருவாக்கப்பட்டே ஆகவேண்டும்! ஆகவேண்டும்! ஆகவேண்டும்!

அதாவது அரசியல், கலை, இலக்கியம், தொழில் முதலிய அனைத்துத் துறைகளிலும் தலைமை ஏற்று வழிநடத்தும் பொறுப்பும், உரிமையும், பெருமையும், ஆட்சிநிலையும் மதத் தலைவர்களுக்கே உண்டு என்பதை மெய்யாக்க வேண்டும்! மெய்யாக்க வேண்டும்! மெய்யாக்க வேண்டும்! எனவே, மத வேறுபாடு, போட்டி, பொறாமை, ..... முதலிய அனைத்தையும் கடந்து இந்தியத் திருநாட்டில் அனைத்து மதங்களையும் ஒன்றுசேர்த்து, ஒருமைப்படுத்தி, இணைத்து, ஒற்றுமையோடு

செயல்படச் செய்ய வைக்கும் அரிய, பெரிய புரட்சிச் சூழ்நிலையை உருவாக்கியே தீரவேண்டும்! உருவாக்கியே தீரவேண்டும்! உருவாக்கியே தீரவேண்டும். இதற்குரிய சாதனமும், சாதனையும், போதனையும் சித்தர்நெறியே! சித்தர்களின் இலக்கியங்களே! சித்தர்களின் கொள்கைகளே! சித்தர்களின் செயல்முறைச் சித்தாந்தங்களே! சித்தர்களின் மானுடவியல் தத்துவங்களே! சித்தர்களின் சமுதாயச் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளே! சித்தர்களின் அரசியல் வேதங்களே!..... இப்பேருண்மையினை முதலில் தமிழர்களும், பிறகு தென்னிந்தியர்களும், அதற்குப் பிறகு இந்தியர்களும், அதற்குப் பிறகு உலகத்தவர்களும் தெரிந்து, புரிந்து, விரும்பி ஏற்றிடச் செய்யவேண்டும்! ஏற்றிடச் செய்யவேண்டும்! ஏற்றிடச் செய்யவேண்டும்!

ஏனெனில், இந்து மத வரலாறும், வாழ்வியலும், நடைமுறையும், கொள்கையும், குறிக்கோளும்தான் உலக மதங்களுக்கும், இனச் சமுதாயங்களுக்கும், நாட்டு அரசியல்களுக்கும், நாகரீகக் கலைகளுக்கும், பண்பாட்டு இலக்கியங்களுக்கும் மூலமாக, தாயாக, கருவாக, உயிராக, ..... இருக்கின்றன! இருக்கின்றன! இருக்கின்றன! அருளுலகத்தாரின் ஆணைபெற்று உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டையும், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தையும் அருளாட்சி மூலம் உருவாக்க வந்திருக்கும் அருளாட்சி நாயகமான நமது தலைவர், குருதேவர், ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்கள் கனவை நனவாக்க நாமெல்லாம் தேனீக்கள் போல் செயல்பட்டேயாக வேண்டும்! ஆக வேண்டும்! ஆக வேண்டும்!

அன்பு கூர்ந்து பதில் எழுதவும்.

**அன்பு சித்தரடியான்**
**சு. வெங்கடேசன்**

//உண்மை நகல்//

## <u>இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்</u>

**<u>பிறப்பிடம்</u>**:- ‘இளமுறியா’க் கண்டம் எனும் கடலுள் மறைந்த ‘குமரிக் கண்டம்’.

**<u>காலம்</u>**:- பதினெண்சித்தர்களால் அஞுதிக் காலத்தில் அதாவது, இன்றைக்கு (2017இல்) 43,73,117 ஆண்டுகளுக்கு முன்ஞல் (ஆங்கில ஆண்டுக் கணக்கின்படி கி.மு.43,71,101இல்) தோற்றுவிக்கப் பட்டது.

**<u>மொழி</u>**:- அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி.

**<u>வழிபாட்டு நிலையம்</u>**:- 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சீவாலயங்கள்.

**<u>இந்துமதக் காவலர்</u>**:- ஞாஞச்சாரியார்கள் எனும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள்.

**<u>இந்துமதம் வளர்ப்பவர்</u>**:- இம்மண்ணுலகில் தோன்றும் 48 வகை சித்தர்கள், கருப்புகள், வழிபடு நிலையினர்கள், கருவறை மூலவர்கள், அருளாளர்கள், மருளாளர்கள், அருளாளிகள், மருளாளிகள், அருளாடு நாயகங்கள், மருளாடு நாயகங்கள், எண்வகை மூல ஆச்சாரியார்கள், பதின்மூன்று வகை குருவழி ஆச்சாரியார்கள், நாற்பத்தெட்டு வகை பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள்..... எனப் பலர்.

**<u>இந்துவேத நூல்கள்</u>**:- 108 பூசைமொழி நூல்கள், 48 பூசைவிதி நூல்கள், 96 தத்துவ நூல்கள், 144 செயல்சித்தாந்த நூல்கள் ஆக 396 நூல்கள்.

**<u>இந்துமத நூல்கள்</u>**:- 1.கருவாக்கு 2.கருவாக்கியம், 3.கருவாசகம் 4.குருவாக்கு 5.குருவாக்கியம் 6.குருவாசகம் 7.தருவாக்கு 8.தருவாக்கியம் 9.தருவாசகம் 10.திருவாக்கு 11.திருவாக்கியம் 12.திருவாசகம் 13.அருள்வாக்கு 14.அருள்வாக்கியம் 15.அருள்வாசகம் 16.மருள்வாக்கு 17.மருள்வாக்கியம் 18.மருள்வாசகம் எனும் பதினெட்டு (18) நூல்களும்;

1.அத்தரம் 2.அத்திரம் 3.அத்திறம் 4.சாத்தரம் 5.சாத்திரம் 6.சாத்திறம் 7.சூத்தரம் 8.சூத்திரம் 9.சூத்திறம் 10.தோத்தரம் 11.தோத்திரம் 12.தோத்திறம் 13.நேத்தரம் 14.நேத்திரம் 15.நேத்திறம் 16.வேத்தரம் 17.வேத்திரம் 18.வேத்திறம்

எனும் பதினெட்டு நூல்களும் ஆக முப்பத்தாறு (36) நூல்கள்.

<u>ஆதாரம்:</u>- மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவஞரின் குருபாரம்பரியம்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** இந்துமதத் தந்தையாகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார். "உலகில் தோன்றிடும் எல்லாச் சமயங்களும் சித்தர் நெறி எனும் ஆற்றின் இருமருங்கும் தோன்றும் கனிமலர்ச் சோலைகளே...." என்று குறிக்கின்றார் இவர்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
www.induism.org *Email:* indhuism@gmail.com

www.books.gurudevar.org